CULTURAL AND POLITICAL SCENARIO
*[TAMIL NADU & PONDICHERRY]*

# THE LOYOLA POLL

*A Comprehensive Survey*
on Media Consumption
Performance of the TN Government &
Prelude to Parliamentary Elections 2004

**on 09.01.2004 [Friday], at 10.45 AM**
**at LIFE Auditorium, Loyola College**

தமிழ்நாடு-பாண்டிச்சேரி பண்பாட்டு-அரசியல் சூழல்

# லொயோலா கருத்துக் கணிப்பு

மக்களின் மீடியா நுகர்வு
தமிழக அரசின் இரண்டரை ஆண்டு செயல்பாடு
நாடாளுமன்றத் தேர்தல் 2004 - ஒரு முன்னோட்டம்

A Joint Venture of Culture and Communication
and Visual Communication Department
Loyola College, Chennai 600 034.

## தமிழ்நாடு-பாண்டிச்சேரி பண்பாட்டு-அரசியல் சூழல்
## *லொயோலா கருத்துக் கணிப்பு*

***ஆய்வுப் பின்னணி:*** லொயோலா கல்லூரியின் பண்பாடு-மக்கள் தொடர்பகமும் காட்சித் தகவலியல் துறையும் இணைந்து தமிழகத்தின் தற்போதைய பண்பாட்டு-அரசியல் சூழலை ஆய்வுசெய்யக் களமிறங்கியது. ஆசிரியரும் மாணவர்களுமாக மொத்தம் 25 பேர் இந்த ஆய்வில் ஈடுபட்டனர். கடந்த டிசம்பர் 17 முதல் 30 முடிய தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியின் 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ***பேரா. டாக்டர் ராஜநாயகம்*** வடிவமைத்து வழிநடத்திய இந்த ஆய்வில், களப் பணிகளை திரு அடைக்கலராஜ் திறம்பட ஒருங்கிணைத்தார். தமிழ்ப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் மற்றும் பண்பியல் கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ராஜநாயகம் உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டது.

தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் 40 நாடாளுமன்றத் தொகுதிகளின் பெயர் தாங்கிய நகரங்களிலும் தொகுதிக்கு இரண்டு கிராமங்களிலுமாக மொத்தம் 4500 பேரிடம் தரவுகள் சேகரிக்கப்பட்டன (தொகுதிக்கு 100 முதல் 120 பேர் வரை). தொகுதி மக்களின் பரவலான கருத்துக்களை அறிந்துகொள்ள ஏதுவாக, அந்தந்த நகரங்களில் சுற்றுப்புறக் கிராம மக்கள் வந்துகூடும் பொது இடங்களும் கணிப்புக்கெனத் தேர்ந்துகொள்ளப்பட்டன.

***பங்கேற்றோர் பின்னணி:*** ஆய்வில் கலந்துகொண்டோரில் பெரும்பான்மையோர் (50.2) 26 முதல் 40வரையிலான வயதினர் (25 வயது வரை - 18.1, வயது 41-55வரை - 23.7, பிறர் 56 வயதுக்கு மேல்). இவர்களில் ஆண்கள் 87.4, பெண்கள் 12.6 மட்டுமே. உண்மையில், கணிப்பின்போது ஏறத்தாழ ஆண்களுக்குச் சமமான எண்ணிக்கையில் பெண்களும் இருந்தாலும், அவர்கள் பெரும்பாலும் ஆண்களின் கருத்துக்களையே ஆமோதிப்பவர்களாக இருந்துள்ளனர். கருத்துத் தெரிவித்தோரில் 60.9 எக் கட்சியையும் சாராதவர்கள் (கட்சி உறுப்பினர்களில்: அதிமுக - 14.0, திமுக - 13.9, பாஜக - 1.3, காங்கிரஸ் - 3.9, பொதுவுடைமைக் கட்சிகள் - 1.0, பாமக - 1.2, மதிமுக - 1.2, பிற - 2.7).

### *பகுதி-1. தமிழ்நாடு-பாண்டிச்சேரி மக்களின் மீடியா நுகர்வு*

***(1) பிடித்த நடிகர்:*** பங்கேற்றோரில் மிகப் பெரும்பான்மை (89.1) எந்த ரசிகர் மன்றத்திலும் உறுப்பினராக இல்லை என்றாலும், வெறும் 14.0 மட்டுமே எந்த நடிகரையும் பிடிக்காது என்று தெரிவித்துள்ளனர். முதல் 10 இடங்களிலுள்ள மக்களுக்குப் பிடித்த நடிகர்கள்:



இந்த நடிகர்களைத் தங்களுக்குப் பிடித்துள்ளதற்குக் காரணம் அவர்களது நடிப்பு என்பது பெருவாரியான கருத்தாக உள்ளது (66.6), ஏழைகளுக்கு உதவி செய்வது (4.0), வாழ்க்கைக்குத் தேவையான செய்தி (மெசெஜ்) சொல்வது (3.9), அழகான தோற்றம் (2.4), சண்டை (1.9), நடனம் (1.9) ஆகியவை பிற காரணங்களாக முன்வைக்கப்படுகின்றன.

***(2) சினிமா பார்க்கும் விதம்:*** கணிப்பில் பங்கேற்றோரில், திரையரங்கு சென்று படம் பார்ப்போர் 46.2, தொலைக்காட்சியில் காண்போர் 36.4. வெகுசிலர் மட்டும் சி.டி./கேசட் ஆகவும் (1.6), லோகல் கேபில் வழியாகவும் (1.8), பஸ் பயணத்தின்போதும் (0.2) பார்க்கின்றனர். படம் பார்ப்பதில் ஆர்வமில்லை என்போர் 13.7 மட்டுமே. திரையரங்கு சென்று படம் பார்ப்போரில், மாதம் ஒரு முறையேனும் செல்பவர்களே அதிகம் (40). இரு வாரங்களுக்கு ஒரு முறை - 14, வாரம் ஒரு முறையேனும் - 13, வாரம் மூன்று முறைக்கு மேல் - 14, திருவிழா நேரங்களில் மட்டும் - 19.

***(3) சினிமாவைத் தேர்ந்தெடுக்கும் விதம்:*** ஒரு திரைப்படத்தைப் பார்ப்பதற்குத் தேர்ந்தெடுக்கும் அடிப்படைகளில் முதன்மை பெறுவது நல்ல கதையம்சம் (34.5). அடுத்த இடம் கதாநாயகனுக்கு (21.9). கதாநாயகி, இயக்குநர், பாடல் இவற்றைவிட காமெடிக்கு சிறிது அதிக ஆதரவு உள்ளது (5.3). ஒரு படத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு குறிப்பான காரணம் எதுவுமில்லை என்போர் 18.8.

***(4) திரைவிமர்சனம்:*** தமிழக-பாண்டி மக்களில் திரை விமர்சனத்தின் அடிப்படையில் ஒரு படத்தைப் பார்க்க முடிவுசெய்வோர் 17.6. இவர்களில் பலரும் தொலைக்காட்சி மற்றும் வார இதழ்களில் வரும் திரைவிமர்சனங்களைக் கவனிக்கிறார்கள். இதழ்களில் குமுதம் (22.4) மற்றும் ஆனந்த விகடன் (16.4) முன்னிலை வகிக்கின்றன. தொலைக்காட்சிகளில் சன் டி.வி. திரைவிமர்சனம் பேரளவு ஆதரவு பெற்றுள்ளது.




***(5) எத்தனை சேனல், எவ்வளவு நேரம்?:*** கணிப்பில் பங்கேற்றோரில் 11.4 பேர் வீடுகளில் மட்டுமே தொலைக்காட்சி இல்லை. பெரும்பான்மை வீடுகளில் இலவச சேனல்கள் (32), அதிகபட்சமாக 25 சேனல்கள் வரை (24.2) பெற முடிகிறது (ஐம்பது சேனல்கள் வரையில் - 17, ஐம்பதுக்கும் மேல் - 7.9, தூர்தர்ஷன் மட்டும் பெறும் வீடுகள் - 7.6). வாரநாள்களில் 79.5 வீடுகளில் சராசரியாக இரண்டு மணி நேரமும், விடுமுறை நாள்களில் 69.4 வீடுகளில் நான்கு மணி நேரமும் டி.வி. பார்க்கிறார்கள். பிறர் இதைவிட அதிக நேரம் டி.வி.யில் செலவழிக்கிறார்கள்.

***(6) வழக்கமாகப் பார்க்கும் டி.வி.:***

தமிழக-பாண்டி மக்களால் வழக்கமாகப் பார்க்கப் படும் சேனல்கள் வரிசையில் முதலிடம் பெறுவது சன் டி.வி. (67.7). அடுத்ததாக தூர்தர்ஷன் (10.5). பிற சேனல்களில்: ஜெயா - 3.4, கே டி.வி. - 3.0, ராஜ் - 2.2, விஜய் - 2.0.



*(7) விரும்பிப் பார்க்கும் டி.வி. நிகழ்ச்சி:* தமிழக-பாண்டி அளவில் மக்கள் விரும்பிப் பார்க்கும் முதல் ஐந்து டி.வி. நிகழ்ச்சிகளில் முதலிடம் செய்தி (39.7), அடுத்தது தொடர் (27.7), மூன்றாவது சினிமா மற்றும் சினிமா தொடர்பானவை (9.6), நான்காவது விளையாட்டு (5.4), ஐந்தாவது மியுசிக் (2.6). எனினும், பாலினரீதியாகப் பார்க்கையில் நிறைய வேறுபாடுகள் உள்ளன. ஆண்கள் செய்தியிலும் பெண்கள் தொடரிலும் அதிக நேரம் செலவழிக்கின்றனர்.




*(8) பிடித்த இசை:* தமிழக-பாண்டி மக்கள் பரவலாக விரும்பிக் கேட்கும் இசை திரைப் பாடல்கள் (63.7), கிளாசிகல் (12.3), பக்திப் பாடல்கள் (6.6). திரைப்பாடல்களைக் கேட்கும் ஊடகங்கள் ரேடியோ (35.5) மற்றும் தொலைக்காட்சி (33.4). டேப்/சி.டி. வாங்கிக் கேட்போர் 15.1 மட்டுமே.

*(9) பிடித்த வானொலி:* தமிழக-பாண்டி மக்களில் வானொலி கேட்காதோர் 32.6. கேட்கும் வானொலிகளில் முதலிடம் வகிப்பது சூரியன் FM (29.6). தொடர்வன அகில இந்திய வானொலியின் FM (15.0) மற்றும் AM (5.3), ரேடியோ மிர்ச்சி (4.8). பெரும்பாலோரால் விரும்பிக் கேட்கப்படும் ரேடியோ நிகழ்ச்சி சினிமாப் பாடல்கள் (59.6).

*(10) வாசிக்கும் பழக்கம்:* தமிழக-பாண்டி மக்களில் வெறும் 9.2 பேர் தவிர பிறரிடம் பத்திரிக்கை வாசிக்கும்/வாங்கும் பழக்கமுள்ளது. மக்களிடம் அதிக செல்வாக்குப் பெற்றுள்ள முதல் 5 தினசரிகள்: தினத்தந்தி (47.7), தினமலர் (25.4), தினமணி (7.1), தினகரன் (6.6), நமது எம்.ஜி.ஆர். (1.3). ஆங்கில நாளிதழ்களில் ஹிந்து (11.9), இந்தியன் எக்ஸ்பிரஸ் (2.6) ஓரளவு வாசிக்கப்படுகின்றன. பத்திரிக்கைகளில் பலராலும் விரும்பி வாசிக்கப்படும் முதல் 5 பகுதிகள்: அரசியல் (55.2), பொது அறிவு (9.4), சினிமா (5.5), விளையாட்டு (2.9), கிரைம் (1.7).

## *பகுதி-2. தமிழக அரசின் செயல்பாடு*

*(1) அரசின் அணுகுமுறை குறித்த கணிப்பு:* கடந்த இரண்டரை ஆண்டுகளில் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்வதிலும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் அதிமுக அரசு பின்பற்றி வந்துள்ள அணுகுமுறையுடன் எந்த அளவுக்குத் தமிழக மக்கள் உடன்படுகிறார்கள் அல்லது மாறுபடுகிறார்கள் என்ற விவரம்:

| | | |
|---|---|---|
| அரசு ஊழியர் வேலைநிறுத்தம்: | உடன்பாடு - 54.2 | மாறுபாடு - 45.8 |
| மழைநீர் சேகரிப்புத் திட்டம்: | உடன்பாடு - 75.6 | மாறுபாடு - 24.4 |
| யானைகளுக்கான சிறப்பு முகாம்: | உடன்பாடு - 41.7 | மாறுபாடு - 58.3 |
| மதமாற்றத் தடைச் சட்டம்: | உடன்பாடு - 43.8 | மாறுபாடு - 56.2 |
| கோவில்களில் பலிகொடுக்கத் தடை: | உடன்பாடு - 39.9 | மாறுபாடு - 60.1 |

| | | |
|---|---|---|
| பசுவதைத் தடுப்புச் சட்டம்: | உடன்பாடு - 48.9 | மாறுபாடு - 51.1 |
| கவுரவ ரேஷன் கார்டு திட்டம்: | உடன்பாடு - 44.3 | மாறுபாடு - 55.7 |
| வாக்குச் சாவடிகள் எண்ணிக்கை குறைப்பு: | உடன்பாடு - 38.8 | மாறுபாடு - 61.2 |
| மதுபானக் கடைகளை அரசே நடத்தும் திட்டம்: | உடன்பாடு - 61.3 | மாறுபாடு - 38.7 |
| அரசே ஆற்றுமணல் விற்கும் திட்டம்: | உடன்பாடு - 55.9 | மாறுபாடு - 44.1 |
| எதிர்க்கட்சித் தலைவர்கள் வீடுகளில் சோதனை: | உடன்பாடு - 42.9 | மாறுபாடு - 57.1 |
| செய்தி ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு: | உடன்பாடு - 34.8 | மாறுபாடு - 65.2 |
| காவேரி நீர் பங்கீடு: | உடன்பாடு - 44.2 | மாறுபாடு - 55.8 |
| வீரப்பன் விவகாரம்: | உடன்பாடு - 32.4 | மாறுபாடு - 67.6 |
| இலங்கையில் தமிழர் போராட்டம்: | உடன்பாடு - 47.1 | மாறுபாடு - 52.9 |
| மதச் சிறுபான்மையோர் நடத்தப்படும் விதம்: | உடன்பாடு - 35.6 | மாறுபாடு - 64.4 |
| தலித்துகள்மீதான வன்கொடுமையைக் கையாளுதல்: | உடன்பாடு - 33.2 | மாறுபாடு - 66.8 |
| மதிய உணவுத் திட்டத்தில் முட்டை நீக்கப்பட்டது: | உடன்பாடு - 32.2 | மாறுபாடு - 67.8 |
| நீதித் துறையுடன் அரசு கொண்டுள்ள உறவு: | உடன்பாடு - 35.9 | மாறுபாடு - 64.1 |
| நிதிநிலை மோசம் என அரசு சொல்லும் தகவல்: | உடன்பாடு - 33.1 | மாறுபாடு - 66.9 |
| பள்ளிப் பாடநூல்கள் மாற்றம்: | உடன்பாடு - 64.3 | மாறுபாடு - 35.7 |
| மைய-மாநில அரசுகளுக்கு இடையிலான உறவு: | உடன்பாடு - 41.2 | மாறுபாடு - 58.8 |
| தலைமைச் செயலகம் இடமாற்றம்: | உடன்பாடு - 31.3 | மாறுபாடு - 68.7 |
| பொடா சட்டத்தைப் பயன்படுத்தும் விதம்: | உடன்பாடு - 30.2 | மாறுபாடு - 69.8 |
| தீவிரத் தமிழ் அமைப்புக்கள் மீது நடவடிக்கை: | உடன்பாடு - 33.3 | மாறுபாடு - 66.7 |

***(2) ஒட்டுமொத்தக் கணிப்பு:*** தற்போதைய அரசின் இரண்டரை ஆண்டுக் கால ஒட்டுமொத்தச் செயல்பாடுகளில் முழுமையாகத் திருப்தியடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளோர் 11.3, தற்போதைய அணுகுமுறையை அடுத்த இரண்டரை ஆண்டுகளும் அப்படியே தொடரலாம் என்போர் 10.1.

**இரண்டரை ஆண்டு அரசின் செயல்பாடு-**
**ஒட்டுமொத்தக் கணிப்பு**




**அரசின் அணுகுமுறை தொடரலாமா?**




***(3) கிராம அளவில் அமைப்பு:*** அரசின் பல்வேறு நலத்திட்டங்களைக் கிராம அளவில் செயல்படுத்தச் சரியான அமைப்பாகக் கிராமப் பஞ்சாயத்து போர்டு முதலிடத்தில் கருதப்படுகிறது (29.6). மக்கள் சுட்டிக்காட்டும் பிற முக்கியமான அமைப்புக்கள்: தன்னார்வ நிறுவனங்கள் (NGOs) - 18.6, ஆளும் கட்சி அமைப்பு - 12.6, மகளிர் மன்றம் - 9.1, ரசிகர் மன்றம் - 2.6. எனினும் கணிசமான அளவினர் (26.9) எந்த அமைப்பாலும் பயனில்லை என விரக்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

## *பகுதி-3. நாடாளுமன்றத் தேர்தல் - 2004*
## *ஒரு முன்னோட்டம்*

***(1) வாக்களிக்கும் கட்சி:*** தற்போதுள்ள அரசியல் சூழலில், வரும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கப் போகும் கட்சிகளில் திமுக முதலிடமும் (37.6), அதிமுக இரண்டாம் இடமும் (27.1) பெறுகின்றன.

**தமிழக அளவில் யாருக்கு வாக்கு?**




***(2) பாலினரீதியாக வாக்கு:*** ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு சாராரிடமும் அதிமுகவை விட பத்து சதவீத அதிக செல்வாக்குடன் திமுக திகழ்கிறது. திமுக - ஆ37.6/பெ37.1, அதிமுக - 27.1/27.1, காங்கிரஸ் - 8.2/10.4, பாஜக - 6.8/4.4, பிற - 8.7/10.0, கூட்டணியைப் பொருத்து - 11.5/11.2.

***(3) வயதுரீதியாக வாக்கு:*** அதிமுகவிற்கும் திமுகவிற்குமான இடைவெளியில் வேறுபாடுகள் இருந்தாலும், எல்லா வயதினரிடமும் திமுக முதலிடம் பெறுகிறது.

**வயதுரீதியாக வாக்கு**



*(4) கல்விரீதியாக வாக்கு:* படிப்பறிவில்லாதவர்கள் மத்தியில் திமுகவை விட அதிமுக அதிக செல்வாக்குப் பெற்றுள்ளது (17.8 அதிகம்). ஆரம்பக் கல்விவரை கற்றுள்ளவர்கள் மத்தியில் இரு கட்சிகளும் சமபலம் பெற்றுள்ளன.

**கல்விரீதியாக வாக்கு**




*(5) தொழில்ரீதியாக வாக்கு:* கூலிவேலை செய்வோரிடையே ஏறத்தாழச் சம அளவு ஆதரவுடன் அதிமுகவும் (34.3) திமுகவும் (35.7) விளங்கினாலும், எல்லாத் தரப்பினரிடமும் திமுக முன்னிலை வகிக்கிறது.

**தொழில்ரீதியாக வாக்கு**




கடந்த ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களின் பின்னணியில், அரசு ஊழியரிடையே அதிமுகவின் செல்வாக்குச் சரிந்துள்ள போதிலும், அச் சரிவு திமுகவுக்குப் பேராதரவாக மாறவில்லை (அதிமுக - 16.4, திமுக - 35.8, பாஜக - 10.4, காங்கிரஸ் - 16.4, பிற - 7.5, கூட்டணியைப் பொருத்து - 11.3).

*(6) மதரீதியாக வாக்கு:* இந்து, இஸ்லாமியர், கிறிஸ்தவர் ஆகிய மூன்று மதத்தினரிடமும் பிற கட்சிகளை விட திமுக அதிக செல்வாக்குடன் விளங்குகிறது.

**மதரீதியாக வாக்கு**




*(7) இனரீதியாக வாக்கு:* சாதிரீதியான ஒட்டு மொத்த வகைப்பாட்டை ஆய்வு செய்தால், பிறசாதியினரிடையில் அதிமுகவும் மற்ற மூன்று பிரிவினரிடையிலும் திமுகவும் முன்னணியில் உள்ளன. பிற சாதியினரிடையே கூட்டணியைப் பொருத்து முடிவுசெய்வோம் என்ற பதில் மிக அதிகமாக இருப்பது (23.9) கவனத்துக்கு உரியது.




*(8) குறிப்பிட்ட சாதிவாரியாக வாக்கு:* குறிப்பிட்ட சாதிகளைப் பொருத்த அளவில் முக்குலத்தோர், நாயுடு-ரெட்டி, கவுண்டர், உடையார் ஆகிய சாதிகளிடையே அதிமுகவும், வன்னியர், யாதவர், பிராமணர், செட்டியார், பிள்ளை, முதலியார், முத்தரையர், நாடார் ஆகிய சாதிகளிடையே திமுகவும் பிற கட்சிகளைவிட அதிகம் செல்வாக்குப் பெற்றுள்ளன.









சாதிரீதியான இந்தக் கணிப்பில், கூட்டணியைப் பொருத்து முடிவுசெய்யப்போவதாகச் சொல்வோர் எண்ணிக்கை பல்வேறு சாதியினரிடையிலும் மிகவும் அதிகமாகவே இருப்பது கவனத்திற்குரியது.

***(9) நடிகர்கள் பிரச்சாரம்:*** நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவதை ஆதரிப்போர் 57.8, எதிர்ப்போர் 40.4. தமக்குப் பிடித்த நடிகர் பிரச்சாரம் செய்யும் பட்சத்தில், அந்தப் பிரச்சாரத்தால் பாதிக்கப்படப் போவதில்லை என்போரே (46.7) அதிகம் (தம் கட்சிக்காகப் பிரச்சாரம் என்றால் மட்டும் ஆதரவு - 20.1, எதிர்க்கட்சி என்றாலும் ஆதரவு - 13.9).

***(10) வேட்பாளர்களாக நடிகர்கள்:*** தம் அபிமான நடிகர் வேட்பாளராகக் களமிறங்கும் பட்சத்தில், அவர் தம் கட்சி சார்பில் நின்றால் மட்டும் ஆதரவு அதிகம் (62.9) உள்ளது (எதிரணியில் நின்றால் ஆதரவு 28.1 மட்டும்). கட்சிப் பற்றில் உள்ள உறுதி, சாதி மற்றும் மதத்தைப் பொருத்த அளவில் இல்லை (தம் சாதி வேட்பாளருக்கு எதிராக நிற்கும் நடிகருக்கு ஆதரவு - 42.5, தம் மத வேட்பாளருக்கு எதிராக நிற்கும் நடிகருக்கு ஆதரவு - 40.1). எனினும், சூழ்நிலை எதுவானாலும், நடிகர் வெற்றியடைவாரா மாட்டாரா என்ற சந்தேகமே பெருவாரியான பதிலாக உள்ளது.

***(11) நடிகர்கள் தனிக்கட்சி:*** நடிகர்கள் தனிக்கட்சி ஆரம்பித்தால், யாருக்கும் ஆதரவு இல்லை என்பதே பெருவாரியான கருத்து (51.2). எனினும், ரஜினிகாந்துக்கு ஆதரவு 29.6, விஜயகாந்துக்கு 16.7, பிறருக்கு 2.5.

***(12) சாதி/மத அமைப்புக்களின் தாக்கம்:*** வரும் தேர்தலில் சாதி மற்றும் மத ரீதியான அமைப்புக்கள் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில், எந்தத் தாக்கமும் இருக்காது என்பது பெரும்பாலானோர் கருத்தாக உள்ளது. எனினும், இத்தகைய அமைப்புகள் இடம்பெறும் கூட்டணிக்கு இழப்பு ஏற்படுத்தும் வண்ணம் எதிரான தாக்கம் நிகழவும் வாய்ப்பு உள்ளதாகக் கருதுவோரும் உண்டு.




***(13) சாதி/மத அடிப்படையில் வேட்பாளர்:*** வேறொரு சாதி/மதத்தைச் சேர்ந்த ஒருவர் தம் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டால், எதிர்ப்பைவிட அவருக்கு ***ஆதரவு*** அதிகம் உள்ளது (சாதி 59.4/ மதம் 59.5). தம் சாதி/மதத்தைச் சேர்ந்தவர் எதிரணியில் போட்டியிட்டால், கட்சிப் பற்றைக் கடந்து

அவர்களுக்கு வாக்களிக்கத் ***தயாராயில்லை*** என்பதே ஏகோபித்த கருத்தாக உள்ளது (சாதி 82.9/ மதம் 81.9).

போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் தமது சாதி/மதத்தையே சேர்ந்தவராக இருந்தால், கட்சி அடிப்படையிலும் (சாதி 45.8/மதம் 45.2) வேட்பாளருடைய திறமை அடிப்படையிலும் (35.6/37) வாக்களிக்கப் போவதாகப் பெருவாரியானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர் (பிற பதில்களில்: ஒரே ஊர் - 6.3/7.1, அரசியல் செல்வாக்கு - 6.4/5.9, உறவினர் - 3/1.4). வேட்பாளர்கள் அனைவருமே வேறு சாதி/மதத்தைச் சேர்ந்தவராக இருந்தால், வேட்பாளரின் திறமை முதலிடமும் (44.9/45.4), ஒரே கட்சி (44.1/43.8), அரசியல் செல்வாக்கு (4.7/4.1) ஆகியவை அதற்கடுத்தும் முக்கியத்துவம் பெறுகின்றன.

***(14) ஊழல் குற்றச்சாட்டு:*** பல்வேறு கட்சித் தலைவர்கள் மீதும் சுமத்தப்படும் ஊழல் குற்றச் சாட்டுக்களால் வரும் தேர்தலில் ஏற்படும் பாதிப்பு அதிமுக, பாஜக, திமுக, காங்கிரஸ் என்ற வரிசையில் உள்ளது.




***(15) நடுநிலைச் செய்தி:*** நடுநிலையான நம்பகமான செய்திகளைத் தரும் முதல் ஐந்து தொலைக்காட்சி சேனல்கள்: சன் -31.3, தூர்தர்ஷன் - 20.4, விஜய் - 19.0, ராஜ் - 13.6, ஜெயா - 3.3. செய்தித்தாள்களில்: தினத்தந்தி - 31.4, தினமலர் - 28.1, தினமணி - 16.6, தினகரன் - 3.9 மற்றும் ஆங்கில நாளிதழ்களில் ஹிந்து - 3.2.

***(16) கட்சிக்கு வாக்கு - எம்.பி.க்கு இல்லை:*** தற்போதுள்ள அதே எம்.பி.யே வரும் தேர்தலிலும் போட்டியிட்டால் அவருக்கு வாக்களிக்கப்போவதில்லை என்போர் 56.7. கட்சிரீதியாக, ஒன்றிரண்டைத் தவிர்த்த பிற அனைத்திலும், கட்சிக்கு வாக்களிப்போரில் பாதிக்கு மேலானோர் தற்போதுள்ள எம்.பி.க்கு வாக்களிக்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளனர்.




**கட்சிக்கு வாக்கு - ஆனால் தற்போதைய எம்.பி.க்கு இல்லை**

தற்போதைய எம்.பி.க்கு மீண்டும் வாக்களிக்கப் போவதில்லை என்ற முடிவுக்குச் சொல்லப்படும் காரணங்களில் முதன்மை பெறுபவை: தொகுதியின் தேவைகள் எதையும் நிறைவேற்றவில்லை (46.2), தொகுதிக்கு அடிக்கடி வந்து பார்க்கவில்லை (34.4) ஆகியவை. எம்.பி. நிதியில் முறைகேடு (4.4), கட்சியில் இவரைவிடத் திறமையான ஆட்கள் உள்ளனர் (2.5) போன்ற கருத்துக்களை மிகச் சிலரே வெளிப்படுத்தியுள்ளனர்.

*(17) தொகுதிக்கு நல்லது செய்யும் கட்சி:* இந்தக் கட்சி வென்றால் தங்கள் தொகுதிக்கு நல்லது என விருப்பம் தெரிவிப்போரில், திமுகவுக்கு ஆதரவு - 32.0, அதிமுக - 21.4, காங்கிரஸ் - 7.4, பாஜக - 4.8, பாமக - 1.2, மதிமுக - 1.1, கம்யூனிஸ்ட் - 0.9, சுயேட்சைகள் உள்ளிட்ட பிறர் - 4.3. யார் ஜெயித்தாலும் தொகுதிக்கு நல்லது எதுவும் நடக்கப் போவதில்லை என்போர் 26.8.

குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களிக்க முடிவுசெய்துள்ளோரில் எத்தனை பேர் அந்தக் கட்சி ஜெயித்தால் தொகுதிக்கு நல்லது எனக் கருதுகிறார்கள் என ஆராயும் போது, முதலிடத்தில் திமுக (69.4). அடுத்து வருபவை: அதிமுக (63.9), காங்கிரஸ் (62.4), பாமக (57.1), மதிமுக (46.9), பாஜக (43.6), கம்யூனிஸ்ட் (37.9).

*(18) தொகுதி அளவில் கட்சிகளின் செல்வாக்கு:* தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள 40 நாடாளுமன்றத் தொகுதிகளில் கட்சிகளுக்குள்ள செல்வாக்கை அலசுகையில், எல்லாத் தொகுதியிலும் அதிமுக அல்லது திமுக பிற கட்சிகளைவிட அதிக செல்வாக்குடன் விளங்குகின்றன. குறைந்தது ஐந்து சதவீத இடைவெளியுடன் அதிமுக 8 தொகுதியிலும், திமுக 25 தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன. 7 தொகுதிகளில் அதிமுகவுக்கும் திமுகவுக்குமான இடைவெளி 5 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது.

மொத்தத்தில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக பாஜக 7 தொகுதியிலும் காங்கிரஸ் 12 தொகுதியிலும் பெறுகின்றன. மொத்தத்தில் 5 சதவீதத்திற்கும் அதிகமாக இடதுசாரி கட்சிகள் 3 தொகுதியிலும் பாமக மற்றும் மதிமுக முறையே 4 தொகுதியிலும், புதிய தமிழகம் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் முறையே ஒரு தொகுதியிலும் பெறுகின்றன.

*(19) மாநில அளவில் வெற்றிபெறும் கூட்டணி:* வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு-பாண்டிச்சேரியில் வெற்றிபெறும் கூட்டணியாகப் பரவலாகக் கருதப்படுவது, காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகளை உள்ளடக்கிய திமுக தலைமையிலான கூட்டணியாகும்.




அடுத்த பிரதமர் - திறமையும் வாய்ப்பும்
83.2
69.4
60.5
49.7
42.9
28
34.8
24.5
30.8
19.4
22.5
19.4
10.9
7.9
10.5
7.6
7.6
5.8
7.4
7.2
வாஜ்பாயி
சோனியா
அத்வானி
சந்திரபாபு நாயுடு
ஜெயலலிதா
பிரியங்கா
சரத் பவார்
ஜோதிபாசு
மன்மோகன் சிங்
லல்லு யாதவ்

***(20) மத்தியில் வெற்றிபெறும் கூட்டணி:*** அனைத்திந்திய அளவில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியைவிட பாஜக தலைமையிலான கூட்டணி முன்னணியில் உள்ளது (அதிகம் 6.7).




***(21) அடுத்த பிரதமர்:*** இந்தியாவின் அடுத்த பிரதமராகும் திறமையும் வாய்ப்பும் உள்ளதாகக் கருதப்படும் பத்துப் பேரில், திறமையிலும் வாய்ப்பிலும் முதலிடம் பெறுபவர் வாஜ்பாயி (திறமை - 83.2/ வாய்ப்பு - 69.4). *(தனி வரைபடத்தில் விவரம்.)*

## *கவனத்திற்கு:*

01. மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன.

02. மீடியா நுகர்வைப் பற்றிய பகுதியில், "வழக்கமாகப் பார்க்கும்" டி.வி. சேனல் என்பது பிற சேனல்களை மக்கள் பார்ப்பதில்லை என்று அர்த்தமாகாது.

லொயோலா கல்லூரி, சென்னை 600 034
09 ஜனவரி 2004

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர்

நன்றி

ஆய்வின் பல்வேறு நிலைகளில் கலந்துகொண்ட மாணவர்கள்
வழிநடத்திய ஆசிரியர்கள் & அலுவலர்கள்
களத்தில் தோள் கொடுத்த தோழர்கள்
மற்றும்
திறந்த மனதுடன் கருத்துக்களை வெளிப்படுத்திய தமிழக & பாண்டி மக்கள்